**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE  DHARMAPURI**

O.S. No.174 of 2022

Deposition of   D.W.  4

Name of the Witness:  திரு.மணிமேகன்

Date : 21.01.2025

**குறுக்கு  விசாரணை**

நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை நான் தான் சொன்னேன். நான் கவுடு இனத்தை சேர்ந்தவர். அப்பையன், வஜ்ஜிரம். நாகராஜ், சிவராஜ் நாயுடு இனத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். அவர்கள் இனத்தை தவறுதலாக என்னுடைய பிரமாண வாக்குமுலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

2) 10.05.2011 தேதியிட்ட கிரைய பத்திரம் மூலமாக நான் 2ம் பிரதிவாதிக்கு விற்றுள்ளேன் என்றால் சரிதான். தனபால் சொன்னதால் நான் ராஜாவிற்கு விற்றேன். அந்த கிரைய பத்திரங்களில் உள்ள விவரங்கள் எல்லாம் சரிதான். அந்த கிரைய பத்திரத்தின் சர்வே எண் 89/2 96 சென்ட் விற்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த கிரைய பத்திரத்தில் நான், துரைராஜ், முனிவேல், நவீன்குமார் ராஜாவிற்கு சொத்தை விற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் தனபால் தான் பணம் கொடுத்தார். தனபால் பணம் கொடுத்து ராஜா விற்றதாக அந்த கிரைய பத்திரத்தில் சங்கதிகள் இல்லை என்றால் சரிதான். கிரைய தொகை ரூபாய்

34,000/ என்று குறிப்பிட்டுள்ளது சரிதான். இந்த சொத்தை தவிர நான் ராஜாவிற்கு எந்த சொத்தும் விற்பனை செய்யவில்லை என்றால் சரிதான்.

3) தனபால் 1996ல் சொத்தை வாங்கியதாக என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. நான் 1 1/2 ஏக்கர் நிலம் எதுவும் தனபால் விற்கவில்லை. அவ்வாறு நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியிருந்தால் அது தவறு. சின்னராமன், அப்பையகவுடுவிடம் நிலம் வாங்கியது சம்பந்தமாக எதுவும் தெரியாது. தனபால், முருகன், ராஜா சின்னராமனிடம் நிலம் வாங்கியது சம்பந்தமாக எதுவும் நேரடியாக எனக்கு தெரியாது.

4) என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 23 வருடத்திற்கு முன்பாக பஞ்சாயத்து நடந்ததாக சொல்லப்பட்டிருக்கும் விவரங்களை நான் எதுவும் சொல்லவில்லை. நான் சொல்வது போல் பாகபிரிவினை ஏற்படவில்லை என்றாலும் 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.